Scottish Social Services Council

# சமூக சேவை பணியாளர்களுக்கும் முதலாளிகளுக்குமான நடைமுறை விதிகள்

2024

## சமூக சேவை பணியாளர்களுக்கும் முதலாளிகளுக்குமான நடைமுறை விதிகள்

***ஸ்கொட்லாந்து சமூக சேவைகள் கவுன்சில் (SSSC) நடைமுறை விதிகள் (இந்த விதிகள்) குறிப்பிடுவது:***

- *ஸ்கொட்லாந்தில் சமூக சேவைகளில் பணி புரியும் ஒவ்வொருவரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் நடைமுறை தரங்களும் நடத்தையும்*
- *ஸ்கொட்லாந்தில் உள்ள சமூக சேவை பணியாளர்களின் முதலாளிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தரங்கள்.*

***இந்த விதிகள் பற்றியது***

*அவர்களுக்கு ஆதரவு வழங்கும் பணியாளர்களிடமிருந்து அவர்கள் எதை எதிர்பார்க்கலாம் என்பதை இந்த விதிகள் தனிப்பட்டவர்களுக்கு (சமூக சேவைகளைப் பயன்படுத்தும் மக்கள்) தெரிவிக்கின்றன. மேலும், நடைமுறையை எவ்வாறு அவர்கள் தொடர்ந்து மேம்படுத்த முடியும் என அவர்கள் சிந்திப்பதற்கு இந்த விதிகள் முதலாளிகளுக்கும் பணியாளர்களுக்கும் ஆதரவளிக்கின்றன. தரங்களை நிறைவேற்றுவதில் முதலாளிகள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இரு பகுதியினருக்குமுள்ள பொறுப்புக்களை இந்த விதிகளின் இரு பகுதிகள் காட்டுகின்றன.*

*சமூக சேவை பணியாளர்கள் அனைவருக்கும் அவர்களது முதலாளிகளுக்கும் பொருந்துகின்ற நடத்தை மற்றும் நடைமுறை சார்ந்த தேசிய தரங்களைக் குறிப்பிட்டு, இந்த விதிகளை நாங்கள் முதலில் 2003இல் வெளியிட்டோம். இந்த விதிகளின் 2024 திருத்தம் மூன்றாவது பதிப்பாகும். இது முற்பட்ட பிரதிகள் (2016 மற்றும் 2003) அனைத்துக்கும் பதிலாக உள்ளது.*

***சமூக சேவை பணியாளர்களுக்கான விதி***

*சமூக சேவை பணியாளர்களுக்கான விதி சமூக சேவைகளில் பணி புரியும் ஒவ்வொருவரும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் தரங்களைத் தெளிவான முறையில் குறிப்பிடுகின்றது. இந்தத் தரங்களை நிறைவேற்றுவது உங்கள் பொறுப்பாகும். மேலும், உங்கள் நடைமுறை பற்றிச் சிந்திப்பதற்கும் நீங்கள் எவ்வாறு தொடர்ந்து முன்னேறலாம் எனக் கண்டுகொள்ளவும் நீங்கள் இந்த விதியைப் பயன்படுத்த வேண்டும்.*

***சமூக சேவை பணியாளர்களின் முதலாளிகளுக்கான விதி***

*அவர்களது பணியாளர்கள் நம்பப்படுகிறார்கள், திறன் உள்ளவர்களாக இருக்கிறார்கள், மனவுறுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள் மற்றும் மதிக்கப்படுகிறார்கள் எனப் பார்த்துக்கொள்வதற்கான முதலாளிகளுக்குள்ள பொறுப்புக்கள் பற்றி சமூக சேவை பணியாளர்களின் முதலாளிகளுக்கான விதி குறிப்பிடுகின்றது. முதலாளிகள் என்ற முறையில், சமூக சேவைக்கான விதியில் குறிப்பிடப்படும் தரங்களை அடைந்துகொள்வதற்குப் பணியாளர்களுக்கு நீங்கள் ஆதரவளிக்க வேண்டும். மேலும், தொடர்ந்து முன்னேற்றம் அடைவதற்கு, ஒரு கருவி என்ற முறையில் விதிகளின் இரு பகுதிகளையும் நீங்கள் பயன்படுத்த வேண்டும்.*

## *இந்த விதிகள் எதற்காக முக்கியமானவை?*

***பொதுசன பாதுகாப்பு மற்றும் பணிப் படையை ஒழுங்குமுறைப்படுத்தல்***

*ஆரோக்கியம் மற்றும் சமூக பராமரிப்பு தொடர்பான தரங்களுடன், இந்த விதிகள் தனிப்பட்டவர்கள் அனுபவிக்கும் பராமரிப்பின் அல்லது ஆதரவின் தரத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றன.*

*இந்த நடைமுறை விதிகளுக்கு ஏற்றவாறு பணி புரிவதற்கு, சமூக சேவை முதலாளிகளும் பணியாளர்களும் ஒரு உறுதிப்பாட்டைச் செய்கிறார்கள்.*

*ஒரு நம்பிக்கைக்குரிய, திறனுள்ள, மனவுறுதியுள்ள மற்றும் மதிப்புள்ள பணிப் படையால் வழங்கப்படும் சமூக சேவைகளை ஸ்கொட்லாந்து மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பார்த்துக்கொள்வதற்காக,* SSSC *என்பது பணிப் படையை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது.*

*பராமரிப்பு சேவைகளை வழங்குகின்ற மற்றும் பணியாளர்களுக்கு வேலை வழங்கும் அமைப்புக்களை பராமரிப்பு பரிசோதகர் துறை ஒழுங்குமுறைப்படுத்துகின்றது. மேலும், சமூக சேவைகள் அடங்கலும் தரங்களை மேம்படுத்துவதற்காக, இந்த பராமரிப்பு பரிசோதகர் துறை அறிவுரையை வழங்குகின்றது, மற்றும் நல்ல நடைமுறையை அது மேம்படுத்துகின்றது.*

*பதிவு செய்யப்பட்ட ஒருவர் இந்த விதிகளில் கூறப்பட்ட தரங்களை நிறைவேற்றாதபோது, செயல்முறையை நடைமுறைப்படுத்துவதற்ககான எங்கள் தகுதி மூலமாக* SSSC *நடவடிக்கை எடுக்க முடியும். இந்த விதிகளைப் பின்பற்றுவது தொடர்பாக, பராமரிப்பு சேவைகளை வழங்குவோருக்கு பராமரிப் பரிசோதகர் துறை அறிவுரை வழங்க முடியும். மேலும், தேவையானால், எதிர்பார்க்கப்படும் தரங்களை நிறைவேற்றாத முதலாளிகளுக்கு எதிராக அது நடவடிக்கை எடுக்கலாம்.*

***தினமும் நல்ல நடைமுறைக்கு ஆதரவளித்தல்***

*தொடர்ந்திருக்கும் மேம்பாடு பற்றும் நடைமுறையை மேம்படுத்தல் என்பவற்றுக்கான ஒரு கருவியாக இந்த விதிகள் உள்ளன. உதாரணமாக, பின்வருவனவற்றுக்காக நீங்கள் அவற்றைப் பயன்படுத்தலாம்:*

- *குழு கூட்டங்களில் விதிகள் பற்றிய ஒழுங்கான கலந்துரையடல்களுக்கு ஆதரவளிப்பதற்கு*
- *அறிமுக பயிற்சியின்போது, மற்றும் ஊழியர் கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக*
- *தற்போதுள்ள நடைமுறை பற்றிச் சிந்திப்பதற்கு.*

**www.sssc.uk.com** *என்பதில் இந்த விதிகள் மற்றும்* SSSC *குறித்து அதிகளவில் கண்டுகொள்ளவும்.*

***சமூக சேவை பணியாளர்களுக்கான நடைமுறை விதி***

| | |
|---|---|
| *1.* **தனிப்பட்டவர்களதும் பராமரிப்பாளர்களதும் உரிமைகளையும் நலன்களையும் நான் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும்.** | |
| **ஒரு பணியாளர் என்ற முறையில், நான்** | |
| 1.1 | அன்புடன், இரக்கத்துடன் மற்றும் மரியாதையுடன் பணிபுரிவேன். மேலும், ஒவ்வொரு தனிப்பட்டவரையும் தனித்துவமாக நடத்துவேன். |
| 1.2 | தனிப்பட்டவர்களதும் பராமரிப்பாளர்களதும் உரிமைகளை மற்றும், பொருத்தமானபோது, கருத்துக்களை, விருப்பங்களை மற்றும் தெரிவுகளை மதித்து ஊக்குவிப்பேன். |
| 1.3 | அவர்களது வாழ்க்கையை அவர்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு, மற்றும் அவர்களது பராமரிப்பு அல்லது ஆதரவு தொடர்பாக நன்கறிந்த தெரிவுகளைச் செய்வதற்கு, தனிப்பட்டவர்களுக்குள்ள உரிமைகளை முன்னேற்றுவேன். |
| 1.4 | அவர்களால் விரும்பப்படும் முறையையும் மொழியையும் பயன்படுத்தி தொடர்பாடுவதற்கு, தனிப்பட்டவர்களுடனும் பராமரிப்பாளர்களுடனும் சேர்ந்து பணிபுரிவேன். |
| 1.5 | தனிப்பட்டவர்களது கௌரவத்துக்கும் தனியுரிமைக்கும் மதிப்பளித்து அவற்றைப் பேணுவேன். |
| 1.6 | பன்முகத்தன்மையை ஊக்குவித்து, அடையாளங்கள், பண்புகள் மற்றும் பண்பாடுகள் அனைத்துக்கும் மதிப்பளிப்பேன். |

| 2. நான் தனிப்பட்டவர்களதும் பராமரிப்பாளர்களதும் நம்புதலை மற்றும் மனவுறுதியை ஏற்படுத்தி அவற்றைப் பேணவேண்டும். | |
|---|---|
| **ஒரு பணியாளர் என்ற முறையில், நான்** | |
| 2.1 | உண்மையுள்ளவனாக, வெளிப்படையாக, நேர்மையாக மற்றும் நம்பத்தகுந்தவனாக இருப்பேன். |
| 2.2 | ஒரு மதிப்பான, வெளிப்படையான, சரியான மற்றும் நேரடியான முறையில் தொடர்பாடுவேன். |
| 2.3 | ரகசியமான தகவலுக்கு மதிப்பளிப்பேன், மற்றும் ரகசியத்தன்மை பற்றிய கொள்கைகளை தனிப்பட்டவர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் தெளிவாக விளக்குவேன். |
| 2.4 | நம்பத்தகுந்தவனாக மற்றும் சார்ந்திருக்கக்கூடியவனாக இருப்பேன். |
| 2.5 | பணி தொடர்பான செயலுறுதிகள், உடன்படிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றுக்கு மதிப்பளிப்பேன். மேலும், அவ்வாறு செய்ய முடியாமல் இருக்கும்போது, அதற்கான காரணத்தை தனிப்பட்டவர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் எனது முதலாளிக்கும் விளக்குவேன். |
| 2.6 | நலன் முரண்பாடுகளை உருவாக்கக்கூடிய விடயங்களத் தெரிவிப்பேன், மற்றும்அவை எனது தீர்ப்பை அல்லது நடைமுறையைப் பாதிக்கவில்லை எனப் பார்த்துக்கொள்வேன். |
| 2.7 | தனிப்பட்டவர்களுடனும் பராமரிப்பாளர்களுடனும் கொடைகள் மற்றும் பணம் பரிமாறிக்கொள்ளல் தொடர்பான கொள்கைகளையும் வழிமுறைகளையும் பின்பற்றுவேன். |
| 2.8 | வெளிப்படையான மற்றும் நேர்மறையான உறவுமுறைகளை ஏற்படுத்துவேன். அவர்களது கௌரவத்துக்கு, நல்வாழ்வுக்கு மற்றும் பாதுகாப்புக்கு மதிப்பளிக்கும் தொழில்ரீதியான எல்லைகளை தனிப்பட்டவர்களுடன், பணித்தோழர்களுடன் அல்லது பராமரிப்பாளர்களுடன் சேர்ந்து தொடர்ந்து வைத்திருப்பேன். |

| | |
|---|---|
| **3.** | **முடிந்தளவில் தீங்கிலிருந்து அவற்றைப் பாதுகாக்கும் அதே வேளையில், தனிப்பட்டவர்களதும் பராமரிப்பாளர்களதும் நல்வாழ்வையும் சுதந்திரத்தையும் நான் முன்னேற்ற வேண்டும்.** |
| **ஒரு பணியாளர் என்ற முறையில், நான்** | |
| 3.1 | தீங்கு பற்றிய குற்றச்சாட்டுக்களை அறிவிப்பேன். பொருத்தமான கால அளவுகளுக்குள் நிறுவப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி ஆபத்தான, தவறாக நடத்தும் அல்லது வேறுபாடு காட்டும் நடத்தை எதையும் எதிர்கொண்டு அவை பற்றி அறிவிப்பேன். |
| 3.2 | வேலையில் என்னையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளை, வழிமுறைகளை மற்றும் கொள்கைகளைப் பின்பற்றுவேன். |
| 3.3 | பராமரிப்பை அல்லது ஆதரவை வழங்குவதற்குத் தடையாக இருக்கக்கூடிய வளங்கள் அல்லது செயற்பாடு விடயம் தொடர்பாக எனது முதலாளிக்கு அல்லது பொருத்தமான அதிகாரிக்குக் குறிப்பிடுவேன். |
| 3.4 | ஒரு பணித்தோழரின் செயற்படுவதற்கான தகுதி பலவீனமடையும்போது, எனது முதலாளிக்கு அல்லது ஒரு பொருத்தமான அதிகாரிக்குக் குறிப்பிடுவேன். |
| 3.5 | செயற்பாடு தீங்கை அல்லது இழப்பை ஏற்படுத்தியபோது அல்லது ஏற்படுத்தி இருக்கக்கூடியபோது, எனது முதலாளியுடன், தனிப்பட்டவர்களுடன் மற்றும் பராமரிப்பாளர்களுடன் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் இருப்பேன். |
| 3.6 | செயற்படுவதற்கான எனது தகுதி குறித்து அல்லது செயற்படுவதற்கான மற்றவர்களின் தகுதி குறித்து எனது முதலாளியால், SSSC என்பதால் அல்லது ஒரு பொருத்தமான அதிகாரியால் செய்யப்படும் எந்த விசாரணைகளுடனும் ஒத்துழைப்பேன். இதில், விசாரணைகளில் பங்குபற்றுதல், மற்றும் பொருத்தமான கால அளவுகளுக்குள் சாட்சி வாக்குமூலங்களை, ஆவணங்களை அல்லது வேறு தகவலை வழங்குதல் என்பன அடங்கும். |
| 3.7 | பதிலுரையைக் கொடுப்பதற்கு மற்றும் பெற்றுக்கொள்வதற்கு, கரிசனைகளையும் புகார்களையும் தெரிவிப்பதற்கு, அவற்றை முக்கியமானவையாக எடுத்து அவை பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு, தனிப்பட்டவர்களுடனும் பராமரிப்பாளர்களுடனும் சேர்ந்து பணிபுரிவேன். |
| 3.8 | தனிப்பட்டவர்களுடன், பராமரிப்பாளர்களுடன் மற்றும் பணித்தோழர்களுடன் சேர்ந்து செயற்படும்போது, எனக்குள்ள சக்தியையும் அதிகாரத்தையும் புரிந்து நியாயமான முறையில் பயன்படுத்துவேன். |

| | |
|---|---|
| **4. ஆபத்துக்களை எடுத்துக்கொள்வதற்கான உரிமை தனிப்பட்டவர்களுக்கு உள்ளது என்பதை நான் புரிந்துகொள்ள வேண்டும். மேலும், அந்த ஆபத்துக்களைப் புரிந்து அவற்றை நிர்வகிப்பதற்காக அவர்களுடன் சேர்ந்து செயற்படுவேன்.** | |
| **ஒரு பணியாளர் என்ற முறையில், நான்** | |
| 4.1 | அவர்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு ஏற்படக்கூடிய அல்லது உண்மையான ஆபத்துக்கள் தொடர்பாக, நன்கறிந்த தெரிவுகளைச் செய்வதற்கு, தனிப்பட்டவர்களுடன் சேர்ந்து செயற்படுவேன். |
| 4.2 | தனிப்பட்டவர்களின் நடத்தை அவர்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு தீங்கு ஏற்படும் ஆபத்தை உண்டுபண்ணுமா என மதிப்பிடுவதற்கு, ஆபத்து மதிப்பீடு குறித்த கொள்கைகளையும் வழிமுறைகளையும் பின்பற்றுவேன். |
| 4.3 | அவர்களுக்கு அல்லது மற்றவர்களுக்கு தனிப்பட்டவர்களால் தீங்கு ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பதற்கு, தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். |
| 4.4 | ஆபத்து மதிப்பீடுகளில் கண்டுகொள்ளப்பட்டவை பற்றியும் அவற்றின் பாதிப்புக்கள் பற்றியும் தனிப்பட்டவர்கள், பொருத்தமான பணித்தோழர்கள் மற்றும் முகவர் அமைப்புக்கள் என்போருக்கு அறிவிக்கப்படுகின்றன எனப் பார்த்துக்கொள்வேன். |

| | |
|---|---|
| 5. | நான் எனது பணியின் தரத்துக்குப் பொறுப்பு கூறுபவனாக இருக்க வேண்டும், மற்றும் எனது அறிவையும் திறன்களையும் பேணுவதற்கும் மேம்படுத்துவதற்குமான பொறுப்பை நான் எடுத்துக்கொள்ள வேண்டும். |
| | ஒரு பணியாளர் என்ற முறையில், நான் |
| 5.1 | பொருத்தமான நடைமுறைத் தரங்களை நிறைவேற்றுவேன், மற்றும் சட்டரீதியான முறையில், பாதுகாப்பான மற்றும் பலனுள்ள முறையில் பணி புரிவேன். |
| 5.2 | எனது பணி தொடர்பான கொள்கைகளுக்கும் செயல்முறைகளுக்கும் ஏற்ற முறையில், தெளிவான, சரியான மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவேடுகளைத் தொடர்ந்து வைத்திருப்பேன். |
| 5.3 | எனது பணியைத் திறமையான முறையிலும் பாதுகாப்பான முறையிலும் செய்வதற்கான எனது ஆற்றலைப் பாதிக்கக்கூடிய தனிப்பட்ட சூழல்கள் அல்லது அனுபவங்கள் எவை பற்றியும் எனது முதலாளிக்கு அல்லது பொருத்தமான அதிகாரிக்குக் குறிப்பிடுவேன். |
| 5.4 | எனது பணியின் எந்தப் பகுதியையும் செய்வதற்கு என்னால் முடியவில்லை என நான் உணர்ந்தால், அல்லது போதியளவில் தயாராக இருக்காவிட்டால், அல்லது எவ்வாறு தொடர்ந்து செயற்படுவது என எனக்குத் தெரியாவிட்டால், எனது முதலாளியிடமிருந்து அல்லது பொருத்தமான அதிகாரியிடமிருந்து உதவி கேட்பேன். |
| 5.5 | எனது அபிவருத்தி, கற்றல் தேவைகள், நல்வாழ்வு மற்றும் நடைமுறை தொடர்பாகச் சிந்திப்பதற்கு, மேற்பார்வைக்காகத் தயார்படுத்தி அதில் என்னை ஈடுபடுத்துவேன். |
| 5.6 | எனது அறிவையும் திறன்களையும் மேம்படுத்துவதற்கும் மற்றவர்களின் கற்றலுக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்கும் இடைவிடாது இடம்பெறும் எனது தொழில்ரீதியான கற்றலைத் தொடர்ந்து பேணுவேன். |
| 5.7 | எனது பணித்தோழர்களுடனும் மற்றவர்களுடனும் ஒன்றுசேர்ந்து மற்றும் வெளிப்படையான முறையில் ஒத்துழைத்து பணியாற்றுவேன் மற்றும் அவர்களை மரியாதையுடன் நடத்துவேன். |
| 5.8 | தனிப்பட்டவர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் பணித்தோழர்கள் மீது உள அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றி ஒரு புரிதல் மூலமாக அறிந்த ஒரு முறையில் பணி புரிவேன். |
| 5.9 | நான் மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் வேலைக்கு பொறுப்பானவனாக இருப்பேன். |
| 5.10 | வேறு விதமான தொழில்ரீதியான விதிகளைப் பின்பற்றக்கூடிய வேறு தொழில்களைச் சேர்ந்த பணித்தோழர்களின் பங்குகளுக்கும் சிறப்பறிவுக்கும் மதிப்பளிப்பேன். மேலும் அவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து செயற்படுவேன். |
| 5.11 | பராமரிப்பாளர்களின், குடும்பங்களின் மற்றும் பொருத்தமான மற்றவர்களின் பங்குகளையும் சிறப்பறிவையும் அனுபவத்தையும் கண்டறிந்து அவற்றுக்கு மதிப்பளிப்பேன். மேலும், பொருத்தமான முறையில் அவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து செயற்படுவேன். |
| 5.12 | தனிப்பட்டவர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் ஏனையோரிடமிருந்து பதிலுரையை வரவேற்று அவற்றுக்குச் செவிசாய்ப்பேன். மேலும், எனது நடைமுறையை மேம்படுத்துவதற்கு இதைப் பயன்படுத்துவேன். |

| 6. நான் பொதுமக்களின் நம்புதலையும் நம்பிக்கையையும் நிலைநிறுத்த வேண்டும். | |
|---|---|
| ஒரு பணியாளர் என்ற முறையில், நான் | |
| 6.1 | தனிப்பட்டவர்களை, பராமரிப்பாளர்களை அல்லது பணித்தோழர்களை தவறாக நடத்தமாட்டேன், அலட்சியம் செய்யமாட்டேன் அல்லது சுயநலத்துக்காகப் பயன்படுத்தமாட்டேன். |
| 6.2 | தனிப்பட்டவர்களின், பராமரிப்பாளர்களின் அல்லது பணித்தோழர்களின் நம்புதலைத் தவறாகப் பயன்படுத்தமாட்டேன், அல்லது அவர்களைப் பற்றி அல்லது அவர்களின் தனிப்பட்ட சூழ்நிலைகள் பற்றி என்னிடம் உள்ள தகவலைத் தவறாகப் பயன்படுத்தமாட்டேன். |
| 6.3 | தனிப்பட்டவர்களுடன் அல்லது பராமரிப்பாளர்களுடன் தொழில்ரீதியாகத் தகாத அல்லது தீங்குள்ள உறவுமுறைகளை ஏற்படுத்தமாட்டேன். |
| 6.4 | தனிப்பட்டவர்களுக்கு, பராமரிப்பாளர்களுக்கு அல்லது பணித்தோழர்களுக்கு எதிராக வேறுபாடு காட்டமாட்டேன். |
| 6.5 | தனிப்பட்டவர்களால், பராமரிப்பாளர்களால் அல்லது பணித்தோழர்களால் எந்த விதத்திலும் வேறுபாடு காட்டப்படுதலை மன்னிக்கமாட்டேன். |
| 6.6 | என்னை அல்லது மற்றவர்களைத் தேவையற்ற ஆபத்தில் விடமாட்டேன். |
| 6.7 | சமூக சேவைகளில் பணியாற்றுவதற்கு எனக்குள்ள தகுதியைச் சந்தேகிக்கும் ஒரு முறையில் பணியில் இருக்கும்போது அல்லது பணிக்கு வெளிப்புறமாக நடந்துகொள்ளமாட்டேன். |

# சமூக சேவை பணியாளர்களின் முதலாளிகளுக்கான நடைமுறை விதி

| | |
|---|---|
| 1: நீங்கள் பணியில் சேர்க்கும் மக்கள் சமூக சேவை பணியாளர்களாக இருப்பதற்குத் தகுதியானவர்கள் எனவும் அவர்களது பங்குகளையும் பொறுப்புக்களையும் அவர்கள் புரிந்துகொள்கிறார்கள் எனவும் பார்த்துக்கொள்ளவும். | |
| ஒரு முதலாளி என்ற முறையில், நான் | |
| 1.1 | பொருத்தமான மனப்பான்மைகள் மற்றும் பண்புகள் உள்ள மக்கள், மற்றும் தேவையான அறிவையும் திறன்களையும் பெறுவதற்கான ஆற்றலுள்ள மக்கள் பணிப் படையில் சேர்ந்துகொள்கிறார்கள் எனப் பார்த்துக்கொள்வதற்கு, முழுமையான மற்றும் பாதுகாப்பான பணியில் சேர்க்கும் செயல்முறைகளைப் பயன்படுத்துவேன். |
| 1.2 | பணி சார்ந்த கடமைகளை ஒருவரால் செய்ய முடியுமா எனச் சரிபார்த்துக்கொள்வதற்காக மதிப்பிடுதலின் ஒரு பகுதியாக, குற்றப் பதிவேடுகள், பதிவுப் புத்தகங்கள் மற்றும் தொழிலில் இடைவெளிகள் என்பவற்றைச் சரிபார்ப்பதற்காகப் பொருத்தமான பாதுகாப்பான பணியில் சேர்க்கும் வழிகாட்டலைப் பின்பற்றுவேன். |
| 1.3 | ஒரு குறிப்பிட்ட பதவியில் பணி புரிவதற்கு ஒருவரின் பொருத்தமான தகுதி தொடர்பான சரியான மற்றும் பொருத்தமான தகவலை அல்லது சிபார்சுகளைக் கேட்டுக்கொள்வேன் மற்றும் வழங்குவேன். |
| 1.4 | அவர்களது பங்குகள் மற்றும் பொறுப்புக்கள், பொருத்தமான சட்டம் மற்றும் அவர்களது பணியில் அவர்கள் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் பற்றித் தெளிவான தகவலைப் பணியாளர்களுக்கு வழங்குவேன். |
| 1.5 | நேரடி நிலை நிர்வாகம், தொடர்பாடல் மற்றும் ஆதரவு என்பன குறித்து பணியாளர்களுக்குத் தெளிவான தகவலை வழங்குவேன். |

| 2: அவர்களது நடைமுறை விதியை நிறைவேற்றுவதற்காக சமூக சேவை பணியாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கு ஒரு கலாச்சாரத்தைப் பேணுவதுடன் முறைகளை வைத்திருப்பேன். | |
|---|---|
| ஒரு முதலாளி என்ற முறையில், நான் | |
| 2.1 | அன்பான மற்றும் இரக்கமுள்ள நடைமுறையை ஊக்குவிக்கும் ஒரு முறையில் பணியாளர்களை வழிநடத்துவேன். நிர்வகிப்பேன் மற்றும் மேற்பார்வை செய்வேன். |
| 2.2 | பன்முகத்தன்மையை, உள்ளடக்குவதை மற்றும் சமத்துவத்தை மதிக்கும் மற்றும் தனிப்பட்டவர்களின் உரிமைகளை ஆதரிக்கும் ஒரு முறையில் வழிநடத்துவேன். |
| 2.3 | அவர்களது பராமரிப்பு அல்லது ஆதரவு பற்றிய தீர்மானங்களில் தனிப்பட்டவர்களும் பராமரிப்பாளர்களும், பொருத்தமானவிடத்து, சம்பந்தப்படுகிறார்கள் எனப் பார்த்துக்கொள்ளும் ஒரு முறையில் பணியாளர்களை வழிநடத்துவேன். |
| 2.4 | நடைமுறைப்படுத்துவதற்கான அவர்களின் தகுதியை உறுதிப்படுத்தும் அதே வேளையில், அவர்களது நடைமுறையையும் தொழில் அபிவிருத்தியையும் தொடர்ந்து முன்னேற்றுவதற்குப் பணியாளர்களை வழிநடத்துவேன். |
| 2.5 | நெறிமுறை சார்ந்த நடைமுறை மற்றும் தொழில்ரீதியான எல்லைகள் என்பன பற்றிக் கலந்துரையாடுவதற்கு பணியாளர்களுக்கு ஆதரவளிக்கப்படும் ஒரு வெளிப்படையான கலாச்சாரத்தை முன்னேற்றுவேன். |
| 2.6 | சேவைகளையும் நடைமுறையையும் ஒழுங்குபடுத்துவதற்கும் முன்னேற்றுவதற்குமாக, தனிப்பட்டவர்களிடமிருந்து, பராமரிப்பாளர்களிடமிருந்து மற்றும் ஏனையோரிடமிருந்து பதிலுரையைப் பெறுவதற்கும் அதைப் பயன்படுத்துவதற்குமான முறைகளை வைத்திருப்பேன். |
| 2.7 | பராமரிப்பில் அல்லது ஆதரவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வளங்கள் பெறுதல் தொடர்பான அல்லது தொழிற்படுதல் தொடர்பான கஷ்டங்கள் பற்றி பணியாளர்கள் அறிவிப்பதற்கான முறைகளை வைத்திருப்பேன். மேலும், தேவையானபோது, பொருத்தமான அதிகாரிகளுடன் சேர்ந்து அப்படியான பிரச்சினைகளைக் கவனிப்பதற்காகச் செயற்படுவேன். |
| 2.8 | பணிபுரிதல் நடைமுறைகள் வேறுபாடு காட்டுபவையாக, பொருத்தமற்றவையாக அல்லது எந்தக் காரணத்துக்காகவும் பாதுகாப்பற்றவையாக இருக்கின்றன என அவர்கள் உணரும்போது, அவற்றை அம்பலப்படுத்துவதற்குப் பணியாளர்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு கலாச்சாரத்தை ஏற்படுத்துவேன். மேலும், கரிசனைகளுக்குப் பதிலளிப்பதற்கு, பொருத்தமான நடவடிக்கையை எடுப்பேன். |
| 2.9 | அவர்களது நடைமுறை விதியிலுள்ள தரங்களை நிறைவேற்றுவதற்குப் பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். அது நிகழ்வதைத் தடுக்கக்கூடிய எதையும் செய்யுமாறு அவர்களை வேண்டமாட்டேன். |
| 2.10 | அவர்களது சொந்த தொழில்ரீதியான விதிகளை நிறைவேற்றுவதற்கு வேறு தொழில்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். |
| 2.11 | பணியாளர்களின் செயற்படுவதற்கான தகுதி பலவீனம் அடைந்திருந்தால், அந்தப் பணியாளர்கள் குறித்து பொருத்தமான அதிகாரிக்கு அறிவிப்பேன். |

| | |
|---|---|
| *3: அவர்களது திறன்களை, அறிவை மற்றும் நடைமுறையைப் பலப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பணியாளர்களுக்கு உதவுவதற்கு, கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை வழங்குவேன்.* | |
| *ஒரு முதலாளி என்ற முறையில், நான்* | |
| 3.1 | பணியாளர்கள் அவர்களது பங்கைப் பாதுகாப்பான முறையிலும் பலனளிக்கும் முறையிலும் செய்வதற்கு ஆதரவளிப்பதற்காக, நல்ல தரமான பெற்றுக்கொள்ளக்கூடிய ஆரம்ப பயிற்சி, கற்றலுக்கான மற்றும் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றை வழங்குவேன். |
| 3.2 | கணினி சார்ந்தவை உட்பட, நடைமுறையில் புதிய, மற்றும் மாற்றமடையும் பங்குகள், பொறுப்புக்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாகப் பணியாளர்களுக்கு ஆதரவளித்து அவர்களைத் தயார்படுத்துவேன். |
| 3.3 | கல்வி மற்றும் கற்றல், பலனளிக்கும் பணியிட இடமளிப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் நடைமுறை கற்றல் சந்தர்ப்பங்கள் என்பவற்றை வழங்கி, கல்விக்கும் கற்றலுக்கும் பங்களிப்புச் செய்வேன். |
| 3.4 | பதிவுசெய்தலுக்கான நிபந்தனைகள் மற்றும் தொடர்ச்சியான தொழில்ரீதியான கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தேவை என்பவற்றை நிறைவேற்றி பேணுவதற்கு, SSSC என்பதுடன் பதிவுசெய்யப்பட வேண்டிய பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். |
| 3.5 | அவர்களது தொடர்ச்சியான தொழில்ரீதியான கற்றலையும் தேவைகளையும் முழுமையான முறையில் நிறைவேற்றுவதற்கு, கட்டாயமாக ஆதரவளிக்கப்படும் வருடத்தில் தொழில்ரீதியான கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான வேண்டப்படும் அளவு புதிதாகத் தகுதிபெற்ற சமூக பணியாளர்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது எனப் பார்த்துக்கொள்வேன். |
| 3.6 | அவர்களது பணியைச் செய்வதற்கு அவர்களால் முடியாமல் இருக்கின்றது அல்லது போதியளவில் அவர்கள் தயார்படுத்தப்படவில்லை என்பதால், ஆதரவை வேண்டுகின்ற பணியாளர்களுக்குப் பொருத்தமான முறையில் ஆதரவளிப்பேன். |
| 3.7 | சிந்திப்பதன் மூலமாகவும் பதிலுரை மூலமாகவும் நடைமுறையை விருத்திசெய்து மேம்படுத்துவதற்கு பணியாளர்களுக்கு உதவும் பலனளிக்கும் மற்றும் ஒழுங்கான மேற்பார்வையை வழங்குவேன். |

| | |
|---|---|
| ***4: ஆபத்துக்களை எடுத்துக்கொள்வதற்கான தனிப்பட்டவர்களின் உரிமைகளை மதிக்கும் அதே வேளையில், ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு ஆதரவளிக்கும் ஒரு கலாச்சாரத்தைப் பேணுவேன்.*** | |
| ***ஒரு முதலாளி என்ற முறையில், நான்*** | |
| 4.1 | தீங்கிலிருந்தும் தனிப்பட்டவர்களை, பணியாளர்களை மற்றும் ஏனையோரைப் பாதுகாப்பதற்காக, எழுத்துமூலமான கொள்கைகளையும் வழிமுறைகளையும் வைத்திருப்பேன். |
| 4.2 | குறிப்பாக, சுயநலத்துக்காகப் பயன்படுத்தல், வேறுபாடு காட்டுதல், தீங்கு, அலட்சியம் தவறாக நடத்துதல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை பொருத்தமான கால அளவுகளுக்குள் பொருத்தமான அதிகாரிக்கு அறிவித்தல் பற்றிய எழுத்து மூலமான கொள்கைகளையும் வழிமுறைகளையும் செயற்படுத்தி அவதானிப்பேன். |
| 4.3 | சுயநலத்துக்காகப் பயன்படுத்தல், வேறுபாடு காட்டுதல், தீங்கு, அலட்சியம் மற்றும் தவறாக நடத்துதல் தொடர்பான குறிகளை மற்றும் அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்பவற்றைப் பணியாளர்கள் அறிந்து புரிந்துகொள்கிறார்கள் எனப் பார்த்துக்கொள்வேன். |
| 4.4 | மிரட்டுதல், கொடுமைப்படுத்தல் அல்லது வேறு விதமாக வேறுபாடு காட்டுதல் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல என்பதைப் பணியாளர்கள் புரிந்துகொள்கிறார்கள் எனப் பார்த்துக்கொள்வேன் மற்றும் அப்படிப்பட்ட நடத்தையைக் கவனித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| 4.5 | ஒரு பணித்தோழரின் செயற்படுவதற்கான தகுதி பலவீனமடையும்போது, அது குறித்து ஒரு பணியாளர் அறிவிப்பதற்கான வழிமுறைகளை வைத்திருப்பேன். |
| 4.6 | நடைமுறை தீங்கை அல்லது இழப்பை ஏற்படுத்தியபோது அல்லது ஏற்படுத்தியிருக்கலாம் என்றால், அது குறித்து ஒரு பணியாளர் அறிவிப்பதற்கான வழிமுறைகளை வைத்திருப்பேன். |
| 4.7 | பணியாளர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளை மற்றும் குற்றச்சாட்டுக்களை விரைவாக, பலனளிக்கும் முறையில் மற்றும் வெளிப்படையிலான முறையில் கவனித்துக்கொள்வேன். |
| 4.8 | ஒவ்வொருவரின் பாதுகாப்பையும் மதிக்கும், மற்றும் வன்முறை, பயமுறுத்தல்கள் மற்றும் தவறாக நடத்துதல் என்பன ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவையல்ல என்பதை மதிக்கும் ஒரு கலாச்சாரத்தை ஊக்குவிப்பேன். அப்படிப்பட்ட நிகழ்வுகளைக் குறைப்பதற்கான மற்றும் நிர்வகிப்பதற்கான கொள்கைகளையும் வழிமுறைகளையும் வைத்திருப்பேன். |
| 4.9 | பணியாளர்கள் மீது உள அதிர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வேறுபட்ட தாக்கங்கள் பற்றி அறிந்திருப்பேன். மேலும், இவற்றை அனுபவிக்கும் பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். |
| 4.10 | தவறாக நடத்துகின்ற நடத்தை பணியாளர்கள் மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் பற்றி அறிந்திருப்பேன். அப்படிப்பட்ட நடத்தையை அனுபவிக்கும் பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். |
| 4.11 | பணியாளர்களின் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் சமத்துவம் என்பவற்றை மேம்படுத்துகின்ற, மற்றும் உள்ளெடுத்தல் மற்றும் பன்முகத்தன்மை என்பவற்றை மதிக்கும் கொள்கைகளையும் வழிமுறைகளையும் வைத்திருப்பேன். |
| 4.12 | செயற்படுதலுக்கான தகுதி குறைபாட்டைக் கொண்டிருக்கக்கூடிய பணியாளர்களுக்கு ஆதரவளிப்பேன். மேலும், அவர்களது வேலை தொடர்பான கட்டுப்பாடுகள் குறித்து தெளிவான வழிகாட்டலை வழங்குவேன். |

| | |
|---|---|
| 4.13 | நடைமுறையானது தீங்கை அல்லது இழப்பை ஏற்படுத்தியபோது அல்லது ஏற்படுத்தியிருக்கலாம் என்றால், அது  குறித்து பொருத்தமான அதிகாரிகளுக்கு அறிவிப்பேன். |
| 4.14 | ஆபத்து மதிப்பீடு குறித்த கொள்கைகளையும் வழிமுறைகளையும் வைத்திருப்பேன். |

| | |
|---|---|
| **5: சமூக சேவை முதலாளிகளுக்கான நடைமுறை விதியையும் சமூக சேவை பணியாளர்களுக்கான நடைமுறை விதியையும் தனிப்பட்டவர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் விளம்பரப்படுத்தி, அவற்றை முன்னேற்றுவேன். மேலும், SSSC என்பதன் நடவடிக்கைகளுடன் ஒத்துழைப்பேன்.** | |
| **ஒரு முதலாளி என்ற முறையில், நான்** | |
| 5.1 | சமூக சேவை முதலாளிகளுக்கான நடைமுறை விதியைப் பின்பற்றுவேன். அதனுடன் இணங்குவதற்கான எனக்குள்ள பொறுப்பு குறித்துப் பணியாளர்களுக்குக் குறிப்பிடுவேன். |
| 5.2 | சமூக சேவை பணியாளர்களுக்கான நடைமுறை விதி பற்றிப் பணியாளர்களுக்கு அறிவிப்பேன். மேலும், அதனுடன் இணங்குவதற்கான அவர்களுக்குள்ள பொறுப்புக்கள் பற்றி அவர்கள் புரிந்துகொள்வதற்காக அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவேன். |
| 5.3 | நடைமுறை விதிகளுக்கும் வேறு பொருத்தமான கட்டமைப்புகள் மற்றும் தரங்கள் என்பவற்றுக்கும் இடையிலான முக்கியத்துவத்தையும் தொடர்பையும் முன்னேற்றுவேன். |
| 5.4 | சமூக சேவை பணியாளர்களுக்கும் முதலாளிகளுக்குமான நடைமுறை விதிகள் பற்றி தனிப்பட்டவர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் அறிவிப்பேன். மேலும், இந்த விதிகள் தொடர்பான பிரச்சினைகளை எவ்வாறு தெரிவிப்பது என்பது பற்றிய விபரங்களை வழங்குவேன். |
| 5.5 | செயற்படுவதற்கான ஒரு பணியாளரின் தகுதி தொடர்பான தீர்மானம் எதையும் செய்யும்போது, சமூக சேவை பணியாளர்களுக்கான நடைமுறை விதியைக் கவனத்தில் எடுத்துக்கொள்வேன். |
| 5.6 | செயற்படுவதற்கான ஒரு பணியாளரின் தகுதியில் பலவீனம் இருந்தால், அது குறித்து SSSC என்பதற்கு ஒரு சிபார்சைச் செய்வது பற்றிய வழிகாட்டலைப் பின்பற்றுவேன். பொருத்தமானால், நீங்கள் ஒரு சிபார்சைச் செய்துள்ளீர்கள் எனப் பணியாளருக்குச் சொல்லவும். |
| 5.7 | SSSC என்பதன் விசாரணைகளுடனும் மற்றும் வேறு அதிகாரிகளின் விசாரணைகளுடனும் விரைவாக ஒத்துழைப்பேன். இதில் ஆவணங்களை வழங்குதல், விசாரணைகளுக்குச் செல்வது, மற்றும் கண்டுகொள்ளப்பட்டவைக்கும் தீர்மானங்களுக்கும் பதிலளித்தல் அடங்கும். |
| 5.8 | SSSC என்பதன் விசாரணைகளுடனும் வேறு அதிகாரிகளின் விசாரணைகளுடனும் ஒத்துழைப்பதற்குப் பணியாளர்களுக்கு உதவி ஆதரவளிப்பேன். |
| 5.9 | செயற்படுவதற்கு ஒரு பணியாளருக்குள்ள தகுதி பற்றி SSSC என்பதால் கண்டுகொள்ளப்பட்டவை தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுப்பேன். இதில் அவர்களின் பதிவுசெய்தல் தொடர்பான நிபந்தனைகள் எதையும் நிறைவேற்றுவதற்கு ஒரு பணியாளருக்கு ஆதரவளித்தல் அடங்கும். |
| 5.10 | தனிப்பட்டவர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் வழங்கப்படும் சேவையை மேம்படுத்துவதற்கு, தரத்தை ஏற்படுத்தும் வேறு அமைப்புக்களால் கண்டுகொள்ளப்பட்டவை தொடர்பாகப் பொருத்தமான நடவடிக்கை எடுப்பேன். |

இந்த விதிகள் **2024** மே **1**லிருந்து பொருந்துகின்றன.
மற்றும் முற்பட்ட பிரதிகள் அனைத்துக்கும் பதிலாக உள்ளன.

**Regulation of Care (Scotland) Act 2001**
நடைமுறை, ஒழுக்கம் மற்றும் நடத்தை பற்றிய உதாரணங்களை இந்த விதிகள் கொடுக்கின்றன, ஆனால், நீங்கள் கண்டுகொள்ளக்கூடிய சாத்தியமான ஒவ்வொரு நடத்தை வகையையும் இவை உள்ளடக்காது.


Scottish Social Services Council
Compass House
11 Riverside Drive
Dundee
DD1 4NY

தொலைபேசி: 0345 60 30 891

மின் அஞ்சல்: enquiries@sssc.uk.com

இணையதளம்: www.sssc.uk.com


இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் நீங்கள் விரும்பினால், SSSC என்பதை 0345 60 30 891 இல் தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

© Scottish Social Services Council 2024